உதயநக்ஷத்திரம் — MORNING STAR.

Published on the 2d and 4th Thursday of every Month at two shillings a year, payable in advance.

சும் புத்தகம். சஞ்சிகை ௨௭.] ஆஅசகூ ஸு. புரட்டாசி. ௨௯ தேதி வியாழக்கிழமை Thursday, Sept. 13, 1849. [Vol. IX. No. 17.

TERMS OF THE PAPER.

For each copy—*two shillings a year*—PAYABLE IN ADVANCE.

To *Subscribers who receive the Paper by mail*, each copy, *inclusive of postage—four shillings a year.*

The difficulty of remitting small sums from distant places may be obviated by *five subscribers' uniting their subscriptions and remitting them together in a single pound note.*

The names of Subscribers will be published; and *all receipts of money* will be regularly acknowledged on the last page of the Paper.

Subscribers on the Continent may receive the paper at *four shillings a year*; their papers having to be sent by mail, and a postage of *one penny*, being *prepaid* on each. This is exclusive of Continental postage.

Agents are requested to receive no subscriptions except in conformity with the above terms.

Advertisements will be inserted as heretofore at the rate of *one penny and a half* each line, reckoning the type at Brevier size or seven and a half lines to an inch.

All Notices of Deaths and Marriages will be chargeable as Advertisements.

Communications should be *post paid* to receive attention.

JAFFNA—The Missionaries.
POINT PEDRO—Rev. E. J. Robinson.
CATTAVELY—Mr. J. White.
TRINCOMALIE—Rev. J. Walton.
COLOMBO—Messrs P. B. Fernando and Son.
KANDY—Mr. L. Lawton.
TRANQUEBAR—Mr. Jeddidiah Adams.
BATTICALOE—Rev. J. Gillings.
MADURA—Rev. C. F. Muzzy.
DINDIGUL—Rev. J. Rendall.
MADRAS—P. R. Hunt, Esq.
ISLE OF FRANCE—Mr. George Coe.

நாற்சமைய கோளரி.

எம் காண்டம்.—௩ம் பிரிவு.

பக்கமாய்ப் பள்ளிமேற் பாவினதடியிற் பத்தரா வரிசையாயையர் பத்தரும்புகுந்து புறப்படும் வாசற் படிப்படி மிதித்துமுள்ளே—அக்கசாலையிலிங்கமாய்ச் செய்த தடங்கலுங் கல்லுகளவாவதவணமாலேத்தி மாடவர் துதிக்க அதுபமாகுமா மதியே—மக்களோவறியாமையினாற்செய்வார் மாலேதற்காரமதைச்செய்தார்வைகுண்டனிராமலிங்கவனத்துதித்தால் வணங்கினவிவர்பரமாமா—இக் கதை படிப்பேர்கிரிகாதிருப்பதென்னவாச்சரியமிப்பொழுது வீச்சுரன்றிருமாலிருவரைப்பணிந்தால் ஏகவனத்தொழுவதாயிடுமோ.

என்பதல்ச் கோலிற் பக்கங்களாகக் கட்டின மதில்களுக் மேலுங் கீழும்படுத்த தளவரிசைகளும், ஐயரும் சீவதும் புகுந்து புறப்படுகிறவாசல்ப் படியாகவும் மிதித்தேறும்படிக்கட்டாகவுங் கட்டினதும் அந்தக் கோவிலுக்குள்ளே கம்மாளர் இலிங்கமாகச் செய்ததுமெல்லாங் கல்லுகளல்லவா? ஆமென்றால், அந்த இலிங்கத்தை விஷ்டுணு துதித்து மனுஷர் கும்பிடுகிறதற்குப் புத்தியே. அது கடவுளாகமா? மனுஷரோ தங்கள் அறியாமையினாலே அப்படிச் செய்வார்களென்று சொல்லலாம். ஆனால் ஞபங்கள் தெய்வமென்று சொல்லுகிற விஷ்டுணு எதற்காக அப்படிச் செய்தார்? வைகுண்டவாசனென்கின்ற விஷ்டுணு இராமலிங்கவனத் துதித்தால் இராமலிங்கத்தைத் தொழத இந்த விஷ்டுணு கடவுளாகக் கூடுமா! இந்தக் கதையை இராமாயணத்திலும் வேறே புத்தகங்களிலும் வாசிக்கிறவர்கள் கிரிகிக்காதிருக்கிறதேன்ன ஆச்சரியம்? அப்படிப்பட்ட துமிர்களுக்த இந்தக் காரியங்கவனாற்று விசாரிக்கிற விசேஷித்த அறிவு வேண்டாதாவென்பீர்களானால் சீவன் விஷ்டுணு என்கிற இரண்டு மனித இராசாக்களைப் பணிந்தால் அது ஒன்றான ஏகமாகிய இயேசுக்கிறீஸ்துவைத் தொழிறதாய்ப் பலன்தருமோவென்றிருக்க நாங்கள் வேதத்திற்கு அயோக்கியரென்றும், மேற்படி,

௩ம் காண்டம் முதற் பிரிவு.

இனி மகா விஷ்டுணுவினுடையவுற் நடபடிக்கையின் இலட்சணங்களையும் அவனுடைய தசாவதாரத்தின் மாறுபாடுகளைக் குறித்துஞ் சொல்லியது.

பேரின்பமாவ விருத்தம்.

மூவரையுஞ் சனியன்தான்பிடித்ததாலே முதலோ
ருவன்றவதயிழந்தான் முக்கணுள்ளோன்—சா
வவுருமெனமுனிவன் தனக்குமஞ்சித்தானெளித்கா
னவேலி தன்னிலேதான்—பாவியென்ற திருமா
லோர் பெண்ணினாலே பதியிழந்து பாரியுடன் வன
த்திற் சென்றான் — தேவனென்றேயிவர்கடம்மை
வணங்கினாலித்திறமையுள்ள கதியருளுந் தேவனு
மோ.

இரட்டையாசரியவிருத்தம்.

பத்துருவேடுத்தாற் பிருக்டுசாபம் பழியினைத் தீர்த்திடத்தீருமால் பங்கயனல்லவா பெரியவராரிக்குப் பவன்பிமா முகுந்தவுயுஞ்—சத்துவ மற்ற குழந்தைகளாகச் சபித்திடப் பிருகுவின் மவனி சத்தியாரிடத்தில் வாங்கினள் பார்ப்பார் தாதர்களாண்டிகணேறிகள்—புத்தியாலுணர்ந்துசிந்தவனசெய்ய பொருட்பிரயோசனமின்றி புதைத்துழற்கண்டபஞ்சுபோல் வெந்து போவதற்கேதுவாயிருக்க—இத்துவணமதபேதங்களாற்றமிழரேப்படித் தேறுதலடைவா ரிச்சுரன்றிருமால் இருவரைப் பணிந்தால் ஏகவனத் தொழுவதாயிடுமோ.

என்பதில், விஷ்டுணுவின் மகன் பிரமா வேர் உண்டாக்கினவர்களில் ஒருதனுகிய பிருகுரிஷியிட்டசாபப்பழியைத்தீர்க்க விஷ்டுணுபத்து அவதாரமெடுத்தால் அப்போது விஷ்டுணுவைச் சபித்த பிருகுரிஷியைப் பேற்ற பிரமா விஷ்டுணுவைப் பார்க்கப் பெரியவரல்லவா? சிவன் பிரமா விஷ்டுணு மூன்று பேரையும் பலமற்ற குழந்தைகளாகச் சபிக்கிறதற்கு பிருகுரிஷியின் பெண்சாதி நாகவல்லி சத்துவம் யாரிடத்திலே பெற்றாள்? இவள் திரிமூர்த்திசுவைப் பார்க்கச் பெரியவளல்லவா! பார்ப்பார்தாதர் ஆண்டிகளுடைய வேத மார்க்கங்கள் புத்தியினாலே சிந்திக்கப்பட்டால் அவைகளில் பொருளும் பிரயோசனமுமில்லாமல் அவைகள் சாம்பலிலே புதைந்த நெருப்பைக் கண்ட பஞ்சுபோல வெந்து போகிறதற்கேதுவாயிருக்கக்கொள்ள இப்படிப்பட்ட மதபேதங்களால்த் தமிழர் எப்படித் தேறுதல் அடைவார்கள். சிவன் விஷ்டுணுவென்கிற இரண்டு மனித இராசாக்களைப் பணிந்தால் அது ஒன்றான ஏகமாகிய யேசுக்கிறிஸ்துவைத் தொழுகிறதாய்ப் பலன்தருமோவென்றிருக்க †நாங்கள்வேதத்திற்கு ஐயோக்கியரென்றும், மேற்படி.

†பிருகுவினால்விஷ்டுணுசபிக்கப்பட்டதை இருசமையிளக்கம் பிருகு சாபப்படலம் பாட்டு, க. முதல், ௩டு. வரையிலேயும் திரிமூர்த்திகளும் பிருகுவின் பெண்சாதி நாகவல்லியினால் குழந்தைகளாகச் சபித்துப் பால்கோடுத்துப் பிறகு சாபநிவிர்த்தியாக்கிவிட்டதைச் சுருக்கக்காந்தம் இரேணுகாதேவி உற்பவசுருக்கம் பாட்டு, ௩௨. முதல், ௩கூ. வரையிலேயுங் கண்டறிந்துகொள்க.

மேற் சொன்ன சிவவனவிட விஷ்டுணு நல்லவனோ தெய்வீக மகிமையில் நானமுள்ளவனோவென்றறிவதற்கு அவனுடைய துன்நடபடிகளைக்கொஞ்சஞ் சோதித்துப் பார்க்கக்கடவோம். ஆனால் சர்வமகாவிஷ்டுணு மயம் செகத்தென்று சொல்லியிருக்கிறபடியினாலே அவன் முதல் விசை சத்தியவிற்றிலே உற்பத்தியானனென்றும், கடசியில் உருத்திரனுக்குப் பிறந்தானென்றும் உங்கள் புராணக்காவியங்களில் வெளிப்படுத்தியிருக்க, இப்படிக் கொத்த விஷ்டுணுவானவன் அத்திரி மகா முனியினுடைய ஸ்திரி அவனுக்கு ஈயென்கிற பத்தினியினாற் சபிக்கப்பட்டுக் குழந்தையாய்ப்போனவனை நாரத மகாமுனியினுடைய புண்ணியத்தினாலே மீட்டுவிட்டானென்றும் விஷ்டுணு பன்றியாய் வேஷங்கொண்டு சிவன் பாதங் காணாமற் போனானென்றும் அன்று சிவன் நஞ்சை உண்ணவிட்டால்விஷ்டுணுவும் பிரமாவும் மற்றப்பெயர்களுஞ் செத்தவிடம் புல்முளைத்துப்போமெனறும், அந்த நஞ்சை உட்கொண்டவர்கள்யாவரும் இறந்துபோவார்களென்று உலகத்தவர்கள் நிச்சயமாயறிந்திருக்க, இச்சிவனும் நஞ்சினாலே செத்துப்போனானென்றும் வேளியாகலில்லையா? சதுர்வேதசித்தாந்த அந்தகரேபின்பு அவர்கள் கடைசியில் கேண்டகந்நியென்கிற வேசியை சேட்டைபண்ணி அவள் வயிற்றிலே கல்லாய்ப் பிறந்தானென்றும், அந்தக் கல்லுக்குப் பேர் சாளக்கிறமமென்றுஞ் சொல்லுகிறார்கள்.

சிவவாக்கியர் கலி.

ஒன்றையொன்றுகொள்ளுடேன் உணர்வுசெய்திருக்கினும் — மண்ணினாலுடுபொய்களவுமாறுவேறு செய்யினும் — பன்றிதேடுமீசனபறிந்துகூட வல்லிராய் — அண்ணுதேவருக்குள்ளே அறிந்துணர்ந்து கொள்ளுமே.

என்பதில் சிவவாக்கியன் சிவபதத்திலிருந்துப்போது இந்தப் பாட்டை இப்படிச் சொன்னான்.

அருணகிரியந்தாதியில் வெண்பா.

வானவருமிந்திரரும் மால் பிரமனுஞ்செத்து போனவிடம் புல்முளைத்துப்போகாதோ ஆனபிரான் முத்தனருணேசன்முர்த்தியன்று நஞ்சையள்ளிப் புத்தியுணுண்ணதேபோம், என்றும்.

கன்னபுமாலே கடவுளிலும் நீ பெரியோன் உன்னிலும் நான் பெரியோன் ஒன்றுகேள் இன்னதென உன் பிறப்போ பத்து உயர் சிவனுக்கோர் பிறப்பு என் பிறப்போ எண்ணிமுடியாது.

இப்படி விஷ்டுணுவை மகா தெய்வமென்று புராண பிரவந்தங்களிலே சொல்லியிருக்கவில்லை. ஆனால் விஷ்டுணு பத்திக்காரர் பலவிதமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அவ்விஷ்டுணு மதத்தார் பலவிதமாயிருக்கிறதுமன்றி அவர்களுக்குப் பற்பலபேர்களுமுண்டு. அதாவது தத்துவாதிகள், வைஷணவர், இராமாஞ்சிகள், எம்பெருமான்மதத்தார், சாத்தினவர், சாத்தாதவர், தாதர் முதலியவர்களுமிருக்கிறார்கள். அவரவர்களுக்கு பலபல மந்திரதந்திரங்களும் முத்திரைஇரகசிய தானங்களுமுண்டு. அவர்களெல்லாரும் விஷ்டுணுவை உலோக இரட்சகராகப் பாராட்டி ஆதிவிஷ்டுணு சர்வம் விஷ்டுணு மயமென்று துதிக்கிறார்கள். அவன் ஆதிகாரணமான தெய்வமென்றும், அவ் விஷ்டுணுவில் ஆட்டுச் சுருபமென்றும், ஈரேழு பதினாலு உலோகங்களுஞ் சீவன் மற்றுமுண்டான முப்பத்துமுக்கோடி தேவர்களும் பன்னிரண்டு சூரியனும் அவர் கற்பத்திலே இருக்கிறதென்றும் அவருக்கு ஆடையாபரணங்கள், தொளசிமாவை, கிரிகிடம், சங்குசக்கிராயுதங்கள், கருடவாகனமும் மூன்று பெண்சாதிகளும், ஒருதி இலட்சிமி மார்பிலேயும், ஒருதி பூதேவியும், மற்றொருதி சலதேவியும் இரண்டுபேரும் இரண்டு பாரிசத்திலேயும் வைத்துக்கொண்டு வைகுண்டத்திலும் திருப்பாற்கடலிலேயும் ஆலிவலமேலும்பள்ளிகொண்டிருக்கிறானென்றும் இவன் உலக இரட்சகனென்றுஞ் சொல்லுகிறார்கள். அவ்விஷ்டுணுவானவர் உலகத்தை எப்படி இரட்சித்தானென்று கேட்டால், அவன் அநேக அவதாரமெடுத்து இரட்சித்தானென்பார்கள். அவன் எடுத்ததாக சொல்லப்பட்ட அவதாரங்களில் மச்சு, சுர்ம, வராக, நரசிங்க, வாமன, பரசுராமன, இராம, பலபத்திர ராம, புத்த, கற்கியவதார என்னப்பட்ட தசாவதாரங்கள் விசேஷமாய் மகா பிரபலியமாயிற்று. ஆதலால் இவைகளை ஒவ்வொன்றாய் பற்றிச் சோதித்தாராயவேண்டும் அவனிப்படியாய்ப் பதினொரு பிறலியாய்ப் பிறக்கவந்த காரணமேதென்றால், இப்படிப் பலவித அவதாரமேடுத்தானென்று சொல்லிவருகிறார்கள்.

அதில் முதலாவது மச்ச அவதாரம்.

அந்த மச்ச அவதாரமாவதி யாதென்றால், முன்னொரு கற்ப முடிவிலே அல்லது பூர்வ காலத்திலே பிரமதேவன் ஆயுச இவப்பினாலே நித்திரை போனான். அப்படி நித்திரைபண்ணுகிறவனிடத்திலே வேதங்களிருக்கலாகாதென்றும், அவ் வேதமானது வழியில் நடந்துபோகிறபோது அதைக் கண்ட அயக்கிரிவனென்கிற கள்ள இராட்சதன்கையிலே அகப்பட்டதாம். அவன் பேரைச் சிலர் இலங்காதான் என்றுஞ் சொல்லுகிறார்கள். அந்தத்திருட்டு இராட்சதன் வேதங்தவள எடுத்துக்கொண்டு போய்ச் சமுத்திரத்துக்குள்ளே ஒளித்திருக்கக் காணுனும். இதுநிமித்தியமாக விஷ்டுணுவானவன் அவன் பேரிலே ஒருவன ஏவிவிட்டு தெரியாமல் நூறு இலக்க யோசவனநீண்ட ஒரு மச்சமென்கிற மீன் பிறப்பாய்ப் பிறந்தானும். ஆனால் இந்தச் சலத்திலே இருக்கப்பட்ட இராசாக்கள் முதலாய்த் திருடர்பேரிலேயாவதி மற்றொந்தெந்தத் தேசத்து இராசாக்களின் பேரிலேயாவது படையெடுக்கவேண்டுமானால் தாங்கள் அவர்களைச் சட்டைபண்ணி அவசரமில்லாமல் தங்களுடைய படைத்தலைவரையனுப்பித் தேசங்களைப்பிடித்து யழித்துச் சங்காரம் பண்ணிவருகிறது நிச்சயமாயிருக்க அப்படி முதலாய் விஷ்டுணுவுக்குத் தெரியாமல் மச்ச அவதாரமெடுத்தானும். அந்த மீன் எப்படிக்கோத்ததென்றால் சிறுசெவுளும், பெரியமீசையும், தலுறந்தவாலும், பச்சைசிறச்செதிளும், வளைந்தழுக்கும், ஒளிவுள்ள கண்ணுமுள்ளதாம் அந்த வடிவாய்விஷ்டுணுசலத்திலேயூர்ந்து உடலநெளித்துத்தலையைச்சாய்த்து மீசைகளை அசைத்துத் தான்டித் தான்டி விழ

ந்து மச்சசேஷனடையநேகஞ்செய்துகொண்டு அயக்கிரியேன்பலவனத் தேடிப்பிடித்து அவனையுஞ் சங்கரித்து தேசங்களைச் சிக்கறுத்துக்கொண்டு வந்து நித்திரையன்னி எழுந்திருந்த பிரமாவின்மகயிற் கொடுத்தானும். இந்தக்கதையின் வரலாறுபாகவதத்தி லெழுதியிருக்கிறதென்று சொல்லியிருக்கின்றது. ஆனால் வேதமெப்படிநடந்துபோச்சுது! அது நடந்ததென்றாலுங் கண்ணுக்குத் தெரியாமல் மாயையாய்ப் போகிற வேதத்தை இராட்சதனேப்படிக்கண்டு திருடினால்! மேலும் இதினிமித்தம் ஆதிதேவன் சொற்பச்வனும்ப் பார்க்க வேணுமோவென்ன! இதெல்லாம் பரியாசமும் விளையாட்டுக்கும் வம்புக்கும் ஈங்கிசைச்குஞ் சமானமுமா யிருக்கிறதல்லாமல் தெய்வீகத்துக்கு யோக்கியமாய்க் காணமல் அமோக்கியத்துக்கு இடமானதாயிருக்கிறதென்று தீருகிறாயிருக்கச் சதுர்வேதித்தாந்த அந்தகரே! இதைக் கூர்ந்து பார்க்கிறதோடே கூடச் சொல்லிய இரட்டையாசரியலிருத்தமாவது என்னவென்றால், இன்னும் வரும்.

D. Rayapan.

மோட்சானந்தவியாகிய பரமகுருபரன் ஆரேன்பதைப்பற்றி அருளானும் மருளானும் பேசிக்கொண்ட

சம்பாஷனை.

அருள். வேதவியாதனும் வெகு காலங்ஞானிகளுங் கட்டிவிட்ட வேதங்களையுஞ் சாஸ்திரங்களையும் பல நூல்களையும் பார்த்து அவைகளின்படி நடக்கிறவர்கள் பரகதி பெறமாட்டார்களென்பதாய் வேதாந்திகளும்சித்தர்களும் பல ஞானிகளும்எழுதின மெஞ்ஞான நூல்களை இவ்வூரில் எல்லாச்சாதியாரும்வாசித்தாராய்ந்திருக்கிறார்களோ?

மருள். எல்லாருமல்லச் சிலர் மாத்திரம் இவ்வித ஞான நூல்களைச் சம்பாதித்து வாசித்துப் பார்க்கிறதுமுண்டு. தங்கள் வசத்தில் வைத்திருக்கிறதுமுண்டு. ஆகிலும் இதுவெல்லாங் காட்டுக்கெறித்த நிலவுக்குங் கடுவெளியிற் பெய்த மழைக்குமொப்பாகப்போவதேயன்றிப் பயன்படக் காணவில்லை

அருள். ஏரே பாபரவஸ்து உண்டென்றும் அவருக்கு ஆதியும் அந்தமுமில்லையென்றும் அவரையன்றி வேறொருவரை வணங்குகிறது பாவமென்றும் அப்படி வணங்கிறவர்கள் பரகதியடையார்களென்றும் தேவன் அருள்கொண்டு ஒரு கன்னியினிடமாக நரருவாகப் பிறந்து நரரை நரகத்துக்கு நீக்கி மோட்சத்துக்குச் சுதந்தராக்கப் பரமகுருபரனாகி இவ்வுலகில் ஒருவர் வந்தாரென்றுஞ் ஞானிகள் பாடின இந்தப் பாடல்களைக்குறித்து நீர் என்ன நினைக்கிறீர்?

மருள். ஏரே பாபர வஸ்து உண்டென்றும் அவரையன்றி வேறொரு வஸ்துவையும் வணங்கினால் மோட்சங் கிடையாதென்றும் நான் நன்றாய் அறிந்திருந்தாலும் ஒரு கன்னியினிடமாக மனுஷாவதாரமெடுத்துத் தேவன் பரமகுருபரனாக வந்தாரென்று ஞானிகள் பாடின அந்தப் பரமகுருபரன் அரேன்கிறதை இதுவரையுமறியாமல் மயங்கித்திரிகிறேன் ஐயா.

அருள். உலகத்தில் மனுஷரை மீட்க முப்பத்து மூன்று கோடி தேவர்கள் மனுஷவதாரமெடுத்து வந்திருந்தார்களென்று சொல்லப்பட்டவர்களில் அந்தப் பரமகுருபரனும் ஒருவராகவந்திருப்பாரென்று நீர் நினைக்கவில்லையோ?

மருள். நான் நினைக்கவேயில்லை.

அருள். ஏன் அப்படி நினைக்கவில்லை?

மருள். ஏனெனில் எங்கள் ஞானிகள் அந்த முப்பத்துமூன்றுகோடிதேவர்களின் அக்கிரமச் செயல்களைக் குறித்து எழுதின பாடல்களை எங்கள் புத்தியிற்றோற்று பார்த்தால் தேவன் மனுஷவதாரமெடுத்து வந்தாரென்று ஞானிகள் பாடின அந்தப் பரம குருபரனின் இலட்சணங்களுக்கு மாறுபடுதினால் அவர் அவர்களிலொருவரல்லவென்று நினைக்கவேண்டியிருக்குது.

அருள். பாவத்திலேபிறந்து அநேகந்துற்கிரியைகளைச் செய்து தங்களைத்தானே தேவர்களென்று சொல்லி மனுஷரை அலுப்பினவர்களுடைய ஆகாத நடக்கைகளைக் குறித்து ஞானிகள் பாடின சில பாடல்களைச் சொல்வீரா?

மருள். சொல்லுகிறேன் கேளுமையா.

மூவரும் மூவரல்ல முப்பத்து மூன்றுகோடிதேவர் தஞ்செயலைக்கேட்டாற்றெரிந்துவருவருப்பார் நாவலரி முதலாயுள்ள ஞானிகளனைத்துமிங்கிப் பாவமாளிகைக்குத் தள்ளிப் பரப்பரக்கடிமைசெய்வார்.

மூவரையுந் தனியன்தான் பிடித்தாலே முதலொருதன் சீரழிந்தான் மூக்கண்ணுனுளோன்—காவுவருமொழுனியன்றறைக்காய் அஞ்சித்தானெரிச்தானவிலி தன்னிலேதான்— பாலியெனுந்திருமாலோர் பெண்ணினாலே பதியிழந்து பாரியுடன் வனத்திற் சென்றான் — தேவரென்றேயிவர்கடன்னை வணங்கினுலித்தீமையுள்ளோர் கதியகுஞந் தேவராமோ.

அரசிழந்துமனையிழந்தும் பதியிழந்துமையகோவென்றலையிழந்தகாலங் கான் முதலாமக்கருடன் சண்டைசெய்து கடியகோலபாதகங்கள் புரிந்ததல்லால் வரிசையுடன் தான் பிறந்த குலத்தினுள்ளவனிதையரைக் கற்பழித்துமதனால் கொந்துதீரியமவர்தவனக்கடவுளென்று பாரிற் செப்பியதாலேதுப் பலன் செப்புவிரே. (இன்னும்வரும்.)

உதயதாரகை.

ஆ ஆரசகஷ புரட். மாதம், ௰ரு. தேதி.

பிரதேச சமாசாரம்.

முன்னே அமேரிக்கா முற்றுக்கும் முகாமைக்காரனுயிருந்த போக் என்பவர் வயிற்றுவலவு என்னும் வியாதியினுல் பிறகிட்ட ஆனி மாதம் முதலாந் தேதி காலஞ்சென்றுவிட்டார்.—பொற்சுரங்கங்கள் காணப்பட்ட காலிபோனியாவென்னும் ஊருக்கு அமேரிக்கரைப்பார்க்கிலும் பிரதேசத்திலிருந்து அனேகனங்கள் வந்து கூடுகிற்படியால், அவ்விடத்தில் ஒருவேளை சிறிது இலாசடிகள் உண்டுபடும் போலேயிருக்குது. அவ்விடத்திற் குடிபதியாய் இருக்கின்ற அமேரிக்கர் ஓர்வகையான அரசாட்சி உண்டுபண்ணி அதற்காதாரமாகச் சிறிது படைமுயற்சிகளையுஞ்செய்து, பிரதேசத்தவர்கள் இவ்விடம்வந்து சுறங்கமெடுக்கிறதற்குரித்துள்ளவர்கள் அல்லவென்று தீர்மானம்பண்ணி இருக்கிறார்கள். காலிபோனியாவிலிருந்து உலகத்தின்கண்ணுள்ள பற்பல தேசங்களுக்கும் இந்தளவும் ஏற்றியனுப்பப்பட்ட பொன்னின் விலை பத்திலட்சம்பவுன். இவ்வளவு திரளானபொன் அவ்விடத்திலிருந்தாலும் பொன்னள்ளுவது மிகவுந் தோந்தரவும் வருத்தமும் உயிருக்குச் சேதமுமென்று நினைத்து வெட்கத்துடன் வீட்டுக்குத் திரும்பிப் போகிறார்கள்.

கங்கேரியர் என்னுஞ் சாதியார் யுத்தத்தில் ஏற்பட்டு, அத்தால் அனேகர் உயிர் மடிந்ததைப்பற்றி அமெரிக்காவார் மிகுதியும் பரிதாபங்கொண்டிருக்கிறார்கள். கோதாரியுமோ மிகுதியாய் அழிவுசெய்வருகுது. ஒரு கிழமையிற்குள்ளே சேக் லூஐஸ் என்னும் ஊரிற் பேதியவாதியினுல் இறந்தவர்கள் அஞ்நூற்றுமூன்றுபேர். மெக்சிக்கோ, கன்னெடே என்னும் ஊர்களிலும் பேதியவாதி மெத்த மும்முரமாய் நடக்குது. கோதாரி ஒருபுறமாய் அனேகரை அழிவுசெய்துவர, அமேரிக்காவில் இந்தியரோ திரளாக வழியிலேநின்று காலிபோனியாவுக்குப் போகிற பயணக்காரரை அடித்துப் பறித்துக் கொள்ளை எடுக்கிறார்கள்.

இரண்டுகப்பல்முட்டி ஒன்று சேதமானது.—பிறகிட்ட ஆனிமாதம் இருபத்தேழாந்தேதி 'இயூரேப்பா'' என்னும் புகைக்கப்பல் அமேரிக்காவிலுள்ள நியூயோர்க்குப்பட்டினத்திலிருந்து ஜீவப்பூல் என்னும் பட்டினத்திற்குப் போகிற வழியில் "சால்ஸ் வாட்லேற்'' என்னுங் கப்பலிற் கனதாக்காய் முட்டிற்று. அப்பொழுது சால்ஸ்சாட்லேற் என்னுங் கப்பல் முன்று நிமிஷத்துக்குள்ளாக அமிழ்ந்திப்போயிற்று. அப்பொழுது அதிலேறிப்போனவர்களில் நூற்றுமுப்பத்தைந்துபேர் மாண்டு போனார்கள். கனத்த பனிப்படலத்தினிமித்தம் இச்சம்பவமுண்டாயிற்று. இயூரேப்பா என்ற கப்பலின் துணையினுல் நாற்பத்தைந்துபேர் தற்காக்கப் பட்டார்கள். அந்தக்கப்பலுக்கும் வெகு சேதமுண்டாயிற்று.

ஆஸ்திரியா, கங்கேரி.—ஆஸ்திரியாருக்குங் கங்கேரியருக்கும் உண்டான கடும்போரைப்பற்றி ஏரோப்பைத் தேசத்தில் மாத்திரமல்ல மற்றும் இடங்களிலும் பெரிய உண்டாக்சி உண்டாயிருக்குது. ஆஸ்திரியரும் அவர்களுக்குப் படைத்துணவராய் வந்த மற்றுஞ் சேனைகளுமே பிரதானமாய் வெற்றியடைந்து ஐான்முறுன்று பட்டினத்தையும் பிடித்துக்கொண்டார்கள். கோமோன் என்ற ஊருக்குக்கிட்ட இவர்கள் லேகுசாளாய் யுத்தம்பண்ணினபொழுது இருபக்கத்திலும் அனேகமாயிரம்பேர் வெட்டுண்டு உதிரஞ்சிந்தி நாசமானார்கள். தோற்றோடின பகுதியில் அனேகர் தங்கள் விதவாசல்களையும் ஊர்சேசங்களையும் விட்டுமேலயடார்களு நெருங்கிய தேசங்களிற்போய் ஒளித்திருந்து சந்துருக்களைச் சுயிப்பார்கள்போலே காண்குது. கங்கேரியனுச்சேர்ந்த படைச்சனத்தின்தோகை இரண்டிலட்சங்காணும்.

இங்கிலாந்து.—இங்கிலீசுகாரர் இற்றைக்கு ஐான்டோத வருடத்திற்குமுன் ஸாகோர்ச் சனங்களுடன் வல்யுத்தம்பண்ணி அவர்களை வெல்லமுடியாத்து அவர்களிடங் கொள்ளையாடி எடுத்த ஆஸ்திகளுக்குத் தாங்களும் உரித்தாளிகளென்று அவ்விடத்திற் போர்பண்ணின சேனைகள் பாலிமேந்தென்னும் சிரேஷட சங்கத்தாருக்கும் முறைப்பாடுபண்ணி இருக்கிறார்கள். அந்தமுறைப் பாட்டைக் கோவரணமேந்தார் திரும்பவும் ஆலோசனைபண்ணும்படி வைத்திருக்கிறார்கள்.

அயலாந்துக்குப் போய் வரும்படி இராசாத்தி பிரயேத்தனம்பண்ணுகிறபடியால் அவ்விடத்திலும் அவளுக்கான மாயாவதுசெய்து அவளை அழைக்கிறதற்கு அனேகமுயற்சிகளைப் பண்ணுகிறார்கள்.

கோதாரிவியாதி அனேக பட்டினங்களிலும் பெரிய கிராமங்களிலும் பிரதானமாய் லொங்தோம் பட்டினத்திலும் மகா மும்முரமாய் நடக்குது. ஒரு கிழமையில் லொங்தோம் பட்டினத்தில்மாத்திரம் இறந்தசனம் ௩௩௩. இது அதற்கு முந்தின கிழமையிலே செத்தத்தில் இரண்டத்தவன. இந்த வியாதி எவ்வளவு கதியாய்ப் பரம்புதென்று பார்க்கில், ஒருநாளோனுக்கு இருபத்திரண்டுபேர் மரித்துவந்தார்கள். ஆறு கிழமைகள்ளாக நாளொன்றுக்கு மரித்த சனம் ௩௩௩.

அற்பன்வேலைக்கு அதிகசம்பளம்.

இதைப்பற்றி இங்கிலாந்தில் ஒருவர் சொல்வதென்னவெனில் ஆ௮ஆ ஆண்டு பாப்புவானவர் ஒரு இஸ்திரியைப் பரிசுத்தஞாட்டியாக்கிறதற்கு நேப்பிலிஸ் என்னுந் தேசத்தரசனிடமிருந்து ௪ரு பவுணும், ஆ௮ரு௩ும். சமும். அல்லது சகம். அண்டனவில், ஒருத்தியினுடைய ஆத்துமா இரட்சிக்கப்படுகிறதற்கு ஒரு பூசைமாத்திரம் வாசிக்கிறதற்கு ஏஞும் பவுணளவுக்கு வாங்கினுரென்று சொல்லித் தான் சொன்ன காரியத்தில் ஏதும் பிசகிருக்கில் அதை அறிந்தவர்கள் வெளிவிடவேண்டுமென்று கேட்கிறார்.

ஒருவன் மனந்திரும்பிக் துணப்படுகிறதற்கு ஓர் அஞ்ஞானி காரணமாய் இருந்தானென்பதைப்பற்றி அவன் ஒரு குருவானவருக்குச் சொன்னதேன்னவெனில், இற்றைக்கு நான் குணப்பட்டு அன்பது வருடமாயிற்று. எப்படியெனில், ஒரு இங்கிலீஸ கப்பலில் ஒருநாள் நான் கற்குத்தாலில் இருந்தபொழுது, சிறிதுவேலைசெய்யும் முகாதிரமாய் ஒருநாயிற்றுக்கிழமை கரைக்கிறங்கிவந்து வேலைசெய்துகொண்டிருக்கையில், அந்நேரம் ஒரு அஞ்ஞானி என்னைப்பார்த்து நீ ஒரு கிறீஸ்தவனேவென்று கேட்டான். அதற்கு நான் ஆம் அப்படித்தானென்றேன். அதற்கு அஞ்ஞானி சொன்னது, உன்னுடைய பரமபான் ஞாயிற்றுக்கிழமையிலே வேலை செய்யென்று சொல்லுகிறுரோ! என்றான். அப்பொழுது நான் வெட்கிப்போய்த் திரும்பவுங் கப்பலிற்போயிருந்தபொழுது இந்தக் கேள்வி அடிக்கடி என் மனதிலே வந்ததினுல் நான் முழுந்தட்டிவிட்டு எனதறியாமையையும் பாவத்தையும்பற்றி அறிக்கையிட்டு அந்த நிமிஷந் தொடுத்துச் சத்திய கிறீஸ்தவனுனேன்.

உவாந்திப்பிராந்தி.

கோதாரியென்னுங் கொடிய பேதிவியாதியானது மறுபடியும் யாழ்ப்பாணத்துப் பறங்கித்தேருவிலும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தெல்லிப்பழைக்கோலிற்பற்றுக்கருகாவும், சந்தரோடைக்குறிச்சியில் ஒருபகுதியிலும் காணப்பட்டுச்சிறிது பேரை மரணத்துக்குள்ளாக்கி வருகின்றது. ஆகிலும் இற்றைக் கொருகிழமைக்கு முன்னிருந்ததிலும் இபபொழுது சற்றே தணியவுடும்போலே காண்குது

வட்டுக்கோட்டையிற் சாஸ்திரப்பள்ளிக்கூடத்திற்குத் தலவவாயிருந்த கனம்பொருந்திய என்னிறிக்சாட் கோய்சிங்ஞன் ஐயரும் அவர் பாரியும் துன்பத்தினிமித்தம் தங்கள் சொன்ன தேசமாகிய அமேரிக்காவுக்குப் போகும்படி இந்தமாதம்ப்த்தாம்தேதி திங்கட்கிழமை சென்னபட்டினத்திற்குப் பயணம்பண்ணிவிட்டார்கள்.

மேரி ரேப்பாட்சன் அப்தோப் என்னும் அம்மாளுடைய மரணம்.—இற்றைக்கு நாவலந்து வருடத்திற்கு முன் உடுப்பிட்டியில் மரணமடைந்துபோன கனம்பொருந்திய என்றி அப்தோப் என்னுங் குருவினுடைய விதவையாகிய அப்தோப் அம்மா இந்தமாசம் இரண்டாந் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு நாலுமணிபோலப் பண்டத்தெருப்பிற் காலஞ்சென்றுவிட்டா. இவவுடைய நாயகனிறந்த பிறகு தன்னுருக்குப் போய்த் தன் இனத்தவர்களையுஞ் சினேகிதர்களையுங் கண்டு அவ்விடத்திலிறப்பதிலும், அஞ்ஞானிகளுக்குள்ளே வாசம்பண்ணி அவர்களுக்கு நன்மையுஞ் அவர்களுக்குள்ளிருந்துகிறந்துவிடுவதுதிகஉத்தமமென்றெண்ணி இவ்விடத்திலேதானே மரித்து உடுவிலில் அடக்கம்பண்ணப்பட்டா. கத்தருக்குள் மரிப்பவர்கள் பாக்கியவான்கள். அவர்களுடைய முடிவோ மகாதானமும் பாக்கியமுமானது.

MORNING STAR.

Jaffna, September 13th, 1849.

OUR WONDROUS ATMOSPHERE.

The atmosphere rises above us with its cathedral dome, arching towards the heaven, to which it is the most familiar synonyme and symbol. It floats around us like that grand object, which the Apostle John saw in his vision—"a sea of glass like unto chrystal." So massive is it that when it begins to stir, it tosses about great ships like playthings, and sweeps cities and forests, to destruction before it. And yet it is so mobile that we have lived years in it before we can be persuaded that it exists at all, and the great bulk of mankind never realize the truth that they are bathed in an ocean of air. Its weight is so enormous, that iron shivers before it like glass; yet a soap-ball sails through it with impunity, and the tiniest insect waves it aside with its wing. Its ministers lavishly to all the senses. We touch it not, but it touches us —Its warm south wind brings back color to the pale face of the invalid; its cool west winds refresh the fevered brow, and make the blood mantle in our cheeks; even its north blasts brace into new vigor the hardened children of our rugged clime. The eye is indebted to it for all the magnificence of sunrise, the full brightness of mid-day, the chastened radience of the gleaming, and the clouds that cradle near the setting sun. But for it the rainbow would want its "triumphal arch," and the winds would not send their fleecy messengers on errands round the heavens. The cloud weather would not sheds its snow-feathers on the earth, nor would drops of dew gather on the flowers. The kindly rain would never fall, nor hail-storm nor fog diversify the face of the sky. Our naked globe would turn its tanned and unshadowed forehead to the sun, and one dreary, monotonous blaze of light and heat dazzle and burn up all things. Were there no atmosphere, the evening sun would in a moment set, and, without warning plunge the earth in darkness.—But the air keeps in her hand a sheaf of his rays, and lets them slip but slowly through her fingers, so that the shadows of evening gather by degrees and the flowers have time to bow their heads and each creature space to find a place of rest, and nestle to repose.

In the morning, the garish sun would at once burst from the bosom of night, and blaze above the horizon, but the air watches for his coming, and sends at first one little ray to announce his approach, and then another, and by and by a handful, and so gently draws aside the curtain of night, and slowly lets the light fall on the face of the sleeping earth, till her eyelids open, and, like man; she goeth forth again to her labor till the evening.—*New England Puritan.*

PRESS ON.

We find the following striking sentiment, the key to fortune, in a little English periodical:

The mystery of Napolean's career was this: under all difficulties and discouragements to press on. It solves the proplem of all heroes; it is the rule by which to judge rightly of all wonderful success and triumphal marches of fortune and genius. It should be the motto of all, high and low, fortunate and unfortunate, so called—"press on," never despair, never be discouraged, however stormy the heavens, however dark the way, however great the difficulties or repeated the failure, "press on." If fortune has played false with thee to-day, do thou play true for this to-morrow. Let the foolishness of yesterday make thee wise to-day. If thy affections have been poured out like water in the desert, do not sit down and perish of this, but "press on"—a beautiful oasis is before thee, and thou mayst reach it if thou wilt. If another has been false to thee, do not thou increase the evil by being false to thyself. Do not say the world has lost its poetry and beauty; it is not so; and even if it be so, make thine own poetry and beauty, by a brave, a true and above all, a religious life.

FAVORABLE INDICATIONS FOR AFRICA.

Rev. J. L. Wilson, a missionary of the American Board at Gaboon in West Africa, has an article in the Southern Presbyterian Review, in which he specifies some features of society in Africa which favor the introduction of the Gospel. We give a sketch of some of his thoughts.

The social character of the natives is favorable. Not that they now are in the enjoyment of social and domestic peace—not that they have not, by the agency of foreigners been excited to great cruelties. But they are in their natural dispositions mild; their choice of pursuits is peaceable, and they are sociable in their natural intercourse. The African is ever ready to share with others his pleasures, and everything that he can call his own. This disposition, unfolding under the influence of the Gospel, and the agency of the Holy Ghost, lends a powerful aid to the diffusion of the Gospel.

Another favorable circumstance is, the high estimation in which the white man is held. Everywhere among the natives is found the same intense desire to see the white man, and meet his wants, and the same readiness to acknowledge his superiority. This superiority, in the hands of wicked men, has been turned to unhallowed purposes; but in the hands of a faithful missionary, it may be made an instrument of incalculable good. And the more so, since the tradition is universal in West Africa, that the white man owes all his advantages to the fact, that he has not departed from the religion which was given to the parents of the race.

In the next place, the pagan tribes here, have no attachment to any well defined system of false religion. They have a vague belief in one Supreme Being, but allow him no actual participation in the government of the world. They have some notions of a future state; they believe in evil spirits, supposed to be the spirits of wicked men now dead, and capable of inflicting injuries upon the living. But all their religious notions are fragmentary, incoherent, and capable of opposing no effectual resistance to the Gospel.

There is now a general desire among the maratime tribes for Christian teachers. Fifteen or twenty years ago, the feeling was just the reverse. Now, the superstitious dread of reading and writing has disappeared, and every tribe on the coast would gladly welcome a Christian missionary. This results mainly from a view of the secular benefits which attend the Gospel, yet it opens a wide door of usefulness.

Decided success has attended missionary efforts here. Before 1833, no Protestant mission had been established between Sierra Leone and the Cape of Good Hope. Since that period, no less than ten distinct missions have been established on the West Coast, and all are in a flourishing condition. Eight thousand children have been gathered into mission schools—more than six thousand persons have been hopefully converted from heathenism. There is a wide and effectual door open for Christianity on that continent.—*New England Puritan.*

GREAT PAY FOR LITTLE WORK.—At a late meeting in London, Sir Culling Eardly Smith stated the following facts, and invited contradiction if he were wrong.

"In the year 1842, the Pope received a sum of between £10,000 and £20,000 from the King of Naples to make a Neapolitan woman a saint. In the year 1839 or 1840, or thereabouts, the Pope received a sum of between £5,000 and £10,000 from an Indian Begum, the mother of Colonel Dyce Sombre, to say one single mass for the salvation of her soul."—*N. York Obs.*

VELOCITY OF ELECTRICITY.—Notwithstanding the almost inconceivable speed of this subtle agent, its velocity has been reduced to actual measurement, by a contrivance which is both simple and unerring. It is found to pass along a coil of wire at the rate of 200,000 miles per second.

LEISURE HOURS.—It was a beautiful observation of the late William Hazlitt, that "there is room enough in human life to crowd almost every art and science in it. If we pass no day without a line—visit no place without the company of a book—we may with ease fill libraries or empty them of their contents. The more we do, the more we can do; the more busy we are, the more leisure we have."

NEAT REBUKE.—"Are a man and his wife both one?" asked the wife of a certain red-eyed gentleman who, in a state of stupefaction, was holding his aching head with both hands, "Yes, I suppose so," was the reply. "Well, then," said she, "I came home drunk last night, and ought to be ashamed of myself." This back-handed rebuke from a long suffering, but affectionate wife, effectually cured him of his brutish propensity.

